THIRU A. R. DAMODARAN : Our complaint is that they do not keep the licence. They keep it in their houses, Sir.

Watch and Ward staff in Jails

*195 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government (i) to reduce and (ii) to revise the work-load of the Watch and Ward Staff in Jails; and

(b) if so, the details thereof?

சிறைச்சாலைக் காவலாளர்கள்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) சிறைச்சாலைக் காவலாளர்களின் வேலைப் பளுவை (i) குறைக்க (ii) மாற்றியமைக்க அரசிடம் ஏதும் செயற் குறிப்பு உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-10)

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி அரசாங்கத்திற்கு சிறைக் காவலாளர்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பொதுவாக இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் அதிகமான எண்ணிக்கையில் வார்டர்களைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அத்துறைத் தலைவர் அனுப்பியிருக்கின்றார்கள். ஆண்டு தோறும் பரிசீலிக்கப்படும் ஒன்றாகும் இது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, காவலர்கள் 24 மணி நேரமும் தங்கள் அலுவல்கள் காரணமாக சிறையிலேயே இருக்க வேண்டி இருக்கின்றது. இதைக் குறைப்பதற்காவது, அவர்களுடைய வேலைப் பளுவினைக் குறைப்பதற்காவது அரசாங்கம் இதைப் பற்றி விரைவான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 மார்ச் 27]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவ்வப் பொழுது அவர்களுடைய வேலைப்பளுவைப் பரிசீலித்து, வேலைப் பளு அதிகமாக இருக்குமானால் உடனடியாக தேவையான அளவிற்கு வார்டர்களை நியமிப்பது என்று ஒரு முடிவெடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு பார்ட் இரண்டு ஸ்கீமில் இது போன்று அதிகமான அளவிற்கு வார்டர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினுக்கள் 196–ம், 197–ம் ஒத்திவைக்கப்படுகின்றன.

Operation of Pump-sets with Alcohol

* 198 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Engineers of Agriculture Department experimented on the operation of pumpsets with alcohol; and

(*b*) if so, the details thereof ?

சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்தல்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்ய, விவசாயப் பிரிவு பொறியாளர்கள் முயன்றது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அளிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பில், இது பரிசிலனை அளவில் இருப்பதாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றது. எப்போது அந்த ஆய்வு முடிந்து, அது பரீட்சார்த்தமாக வரும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இன்றைய நெருக்கடியான நிலையில் இதிலே விரைவான நடவடிக்கை எடுத்தால், விவசாயிகளுக்கு இது லாபகரமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

@ ~~86—87~~ 373-374 ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.